| | |
|---|---|
| OS | 77/2020 |
| நாள் | 19-12-2026 |
| பெயர் | ராஜகோபால் ரமேஷ் |
| தந்தை பெயர் | ராஜகோபால் |
| வயது | 57 |

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

எனக்கு தமிழ் நன்றாக எழுதப் படிக்க தெரியும். என்னுடைய ஆர்.ஓ.சியில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம் ஆகும். எங்களுடைய ஏரியா ஆப்பரேஷன் என்ன என்றால் இந்திய அளவில் சர்வதேச அளவிலும் நாங்கள் வியாபாரம் செய்து வருகிறோம். நான் பதிவு அலுவலகம் வைத்திருக்கும் மதுரை மங்கலம் கிராமம் என்பது பிரதான சாலையிலிருந்து 18 கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால் 25 கிலோ மீட்டர் தூரம் இருக்கும். 2018 ல இருந்து பிரதிவாதி நிறுவனத்திற்கும் எங்கள் நிறுவனத்திற்கும் ஆள்சேர்ப்பு ஒப்பந்தம் உள்ளதா என்றால் இல்லை. பிரதிவாதி நிறுவனத்திடம் இருந்து விற்பனை ஆகிய துறையின் தலைமை நிர்வாகி பதவிக்கு நியமிக்க எங்களுக்கு எழுத்துப்பூர்வமான கோரிக்கை வந்ததா என்றால் திரு.பிரதீப் கேசவ் பரத்வாஜ் பிரதிவாதி நிறுவனத்தின் சீனியர் வைஸ் பிரசிடெண்ட் மார்க்கெட்டிங் அண்ட் சேல்ஸ் என்பவர் போன் மூலமாக அழைத்தது என்னிடம் கேட்டார். இது சம்பந்தமாக

மின்னஞ்சல் தொடர்பு எதுவும் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி பதவிக்கு ஆள் சேர்ப்பு செய்வதற்கு கமிஷன் தொகை எவ்வளவு பேசப்பட்டது என்றால் மெடிக்கல் ரெபசர்ண்ட்டேட்டிவ், மேலாளர், ஏரியொ சோனல் மற்றும் ரீஜினல் ஆகியோர் வரை அவர்களுக்கு வழங்கப்படும் சிடிசியில் 8.33 சதவீதம் கமிஷன் பேசப்பட்டது. இந்த விவரத்திற்கு எழுத்த பூர்வமான ஒப்பந்தம் உள்ளதா என்றால் இல்லை. ஆனால் அவர்கள் எங்களுக்கு 10.09.2018 முதல் வாடிக்கையாளர்களாக இருக்கிறார்கள். என்னிடம் காட்டப்படும் வா சா ஆ 2 ல் எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வேறு ஒரு நபரை ஆட்சேர்க்கை செய்த போது வழங்கப்பட்ட காசோலை என்பதால் அதை தாக்கல் செய்துள்ளேன். இந்த விவரங்களை வழக்குரையில் சொல்லாததற்கு காரணம் என்ன என்றால் அந்த விவரங்கள் அனைத்தும் வழக்கறிஞரிடம் கூறியுள்ளேன். வா சா ஆ 1 எங்கள் நிறுவனத்தால் வழங்கப்படும் சேவைகள் மற்றும் விவரங்களை பற்றி கொடுக்கப்பட்ட கடிதம் ஆகும். வி.எஸ்.ஸ்ரீனிவாச பிரசாத் என்பவர் பிரதிவாதி நிறுவனத்தில் பணியில் சேர்ந்து விட்டார் என்றால் சரிதான். அவருடைய நியமன ஆணை என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எங்களுடைய நிறுவனத்தின் விதிமுறைகளின் படி பிரதிவாதி நிறுவனத்திடம் மேற்படி நபரின் நியமன உத்தரவை பெற்றிருக்க வேண்டும் என்றால் அதை நாங்கள் கேட்டுப் பெறவில்லை. பொதுவாக நாங்கள் எந்த நிறுவனத்திடம் அதைக் கேட்பதில்லை. ஆனால் வா.சா.ஆ.1 கடிதத்தில் அது சம்பந்தமாக நாங்கள் குறிப்பிட்டுள்ளோம் என்றால் சரிதான். வி.எஸ்.ஸ்ரீநிவாஸ் என்பவரின் முதல் இன்வாய்ஸ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என்னிடம் காட்டப்படும் வாதி தரப்பு ஆவணங்களில் மேற்குறிப்பிட்ட ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை. வி.எஸ்.ஸ்ரீனிவாஸ் என்பவர் 12.12.2019 அன்று பணியில்

சேர்ந்தார். 12.12.2019 மேற்படி ஸ்ரீநிவாஸ் என்பவர் பணியில் சேர்ந்ததற்கு எங்களுக்கு மின்னஞ்சல் எதுவும் அனுப்பினாரா என்றால் இல்லை. ஆனால் Whatsapp மூலமாக பேசினார். தகவலும் அனுப்பினார். வி.எஸ்.ஸ்ரீனிவாஸ் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ஆண்டு சம்பளம் எவ்வளவு என்பதற்கு நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. திரு.பிரதீப் கேசவ் பரத்வாஜ் அவர்களுக்கு நான் அனுப்பிய மின்னஞ்சல்களின் நகலை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். முதலில் திரு. சீனிவாஸ் பிரதிவாதி நிறுவனத்தில் பணியில் சேரவில்லை என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியும். முதல் முறை மறுத்து இரண்டாவது முறை பணியில் சேர்வதற்கு இடைப்பட்ட காலத்தில் எனக்கும் ஸ்ரீனிவாசருக்கும் இடையே எழுத்துப்பூர்வமான கடிதம்/மின்னஞ்சல் போக்குவரத்து எதுவும் இருந்ததா என்றால் இல்லை. சம்பளம் குறைவாக இருப்பதால் பணியில் சேரவில்லை என்ற விவரத்தை என்னிடம் போனில் தொடர்பு கொண்டு சொன்னார். சம்பளம் கூட்டினால் பணியில் சேர தயாராக இருப்பதாக சொன்னார். இது தொடர்பாக நான் பிரதிவாதி நிறுவனத்திற்கு எழுத்து மூலமாக தகவல் எதுவும் தெரிவித்தேனா என்றால் இல்லை. மேற்கூரிய விவரங்களை குறித்து வேறு ஏதேனும் கடிதப் போக்குவரத்து ஏற்பட்டதா என்றால் இல்லை. வாய்மொழியாக தான் பேசினேன். நான் தாக்கல் செய்த whatsapp தகவல் பரிமாற்றங்கள் வா.சா.ஆ 3 ல் நான் சொன்ன சிடிசி குறித்து எந்த தகவலும் குறிப்பிடப்படவில்லை அதற்கு என்ன காரணம் என்றால் மேற்படி தகவல்கள் Sensitive என்பதால் அதைக் குறித்து அதில் குறிப்பிடவில்லை. வா.சா.ஆ 3 ல் கண்ட பேச்சுவார்த்தை ஒரு முதல் கட்ட பேச்சுவார்த்தை தான் என்றும், அது Concluded Contract இல்லை என்றால் சரியல்ல. அது Concluded Contract தான். திரு.ஸ்ரீநிவாஸ் அவர்களுக்கு கொடுக்கப்பட்ட ரிவைஸ்ட் சிடிசி

என்ன என்றால் ரூபாய் 66 லட்சம். மேற்படி சீனிவாஸ் என்பவருக்கு ரிவைஸ்ட் பேக்கேஜாக மேற்படித்தொகை வழங்கப்பட்டது என்பதற்கு எழுத்துப்பூர்வமான ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. 05.05.2020 தேதியிட்ட வா.சா.ஆ 8 அறிவிப்பில் ரூபாய் 66 லட்சம் இன்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். எங்களுடைய பில் தொகை தான் அதில் குறிப்பிட்டுள்ளது. வா.சா.ஆ 7 ல் ரீஜாயண்ட் அறிவிப்பில் டிவைஸ் பேக்கேஜ் என்பதை பற்றி குறிப்பிடும்போது தொகையை நாங்கள் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். அதை சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. நாங்கள் கொடுத்த பில் விவரங்களை தான் குறிப்பிட்டுள்ளோம். இவ்வழக்கு ரூபாய் ஏழு லட்சத்தி 92 ஆயிரத்திற்கு தாக்கல் செய்துள்ளேன் ஏதாவது சரிதான். ரூபாய் 1,42,560 வட்டி தொகையாகவும் கேட்டுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி தொகைக்கு நாங்கள் ஜிஎஸ்டி செலுத்தினோமா என்றால் இல்லை பிரதிவாதி தொகை செலுத்தினால் தான் நாங்கள் ஜிஎஸ்டி செலுத்துவோம். எங்களுடைய ஜிஎஸ்டி அசெஸ்மென்ட்டில் மேற்படி தொகையை பற்றி கூறியுள்ளோமா என்றால் இல்லை. முதல் பில் கேன்சல் செய்யப்பட்டதால் அதைப்பற்றி குறிப்பிடவில்லை. 1.07.2020 அன்று நாங்கள் பில் ஒன்றை அனுப்பினோம் என்றால் சரிதான். அதில் ஜிஎஸ்டி சம்பந்தமாக குறிப்பிட்டுள்ளது. வா.சா.ஆ 9 தான் அசல் பில். நாங்கள் முதலில் கேன்சல் செய்த பில்லை வைத்துள்ளன் என்றால் ஆமாம்.

**வேண்டுகோளின்படி வழக்கு குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

(Sd/- Deepthi Arivunithi, M.L.,)
Principal District Judge,
Kancheepuram.